2005 பிப்ரவரி 7]

300-க்கும் குறைவாக உள்ளது. கீழக்கள்ளக்கிரி என்ற இடத்தில் ஓர் ஊராட்சி ஒன்றியப் பள்ளி தற்போது இயங்கி வருகிறது. இப்பள்ளிக்கும் மேலக்கள்ளக்கிரிக்கும் இடையே உள்ள தூரம் ஒரு கிலோ மீட்டர் ஆகும். எனவே, மேலக்கள்ளக்கிரியிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கீழக்கள்ளக்கிரியில் ஒரு பள்ளி இயங்கி வருவதால், மேலக்கள்ளக்கிரியில் ஓர் ஆரம்பப் பள்ளி தொடங்க தற்போது வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 53, திரு. கா.தி. இளையகண்ணு, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.*

53—

பால் குளிரூட்டும் நிலையம்

***53614—திரு. கா.தி. இளையகண்ணு:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதி, வாழப்பாடியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஏற்காடு தொகுதி, வாழப்பாடியில் புதிதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.*

திரு. கா.தி. இளையகண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்காடு தொகுதி, வாழப்பாடி, தாலுகா தலைமையிடமாக உள்ளது. வாழப்பாடி தாலுகா பகுதியில் சுமார் 30,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு, சேலம் குளிரூட்டும் நிலையத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. எனவே, இதனை மறுபரிசீலனை செய்து மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், வாழப்பாடியில் பால் குளிரூட்டும் நிலையம் அடுத்த ஆண்டாவது அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 11-15

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்வரும் காலத்தில் அப்பகுதியில் பால் உற்பத்தி அளவைக் கணக்கில் எடுத்துக்கொண்டும், நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, தேவைப்பட்டால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்@

பட்டியல் 6

1—

கதிர் அடிக்கும் நெற்களம்

வினா எண் 46796—திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடரங்கம் ஊராட்சியிலுள்ள முத்துகிருஷ்ணாபுரத்தில் கதிர் அடிக்கும் நெற்களத்தை வேளாண்மை விற்பனைக் குழுவின் மூலமாகக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்: (அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் ஆண்டில் நிதி நிலைக்கு

@ இப்பட்டியல்களிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.